

ஆலய கோபுரத் தோற்றம்

வேலூர் கோட்டை
ஸ்ரீ அகிலாண்டேசுவரி
சமேத
ஸ்ரீ ஜலகண்டேசுவரர்
திருக்கோயில்

அன்பளிப்பு : K. கிருஷ்ணரெட்டியார் & குமார்கள்,
13/1, பங்களா தெரு, கொசப்பேட்டை, வேலூர்.

ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி துணை

இராயவேலூர் கோட்டை

ஸ்ரீ அகிலாண்டேசுவரி சமேத ஸ்ரீ ஜலகண்டேசுவரர்

கோவில் வரலாறு

வேலூர் ஸ்தலக்குறிப்பு

ஸ்தலத்தின்	பெயர்	...	வேலங்காடு
ஸ்தல விருக்ஷத்தின்	,,	...	வேல மரம்
ஸ்தல தெய்வத்தின்	,,	...	ஜலகண்டீஸ்வரர்
அம்பிகையின்	,,	...	அகிலாண்டீஸ்வரி
குளத்தின்	,,	...	சூரியகுளம்
ஸ்தல விநாயகர்	,,	...	ஞானமூர்த்தி
ரிஷியின் ஆஸ்ரமம்	,,	...	அத்திரி ஆஸ்ரமம்
லிங்கத்தின்	,,	...	அரிஷலிங்கம் (முனிவ ரால் ஸ்தாபிக்கப்பட்டது)
காட்டின்	,,	...	வேல மரக்காடு
நகரத்தின்	,,	...	வேலூர்
கோட்டத்தின் (ஜில்லா)	,,	...	சிறுகரை (கி. பி. 7-ஆம் நூற்றாண்டு வரை இப் பெயரால் அழைக்கப்பட் டது)
நாட்டின் (தாலுக்கா)	,,	...	அயந்த நாடு
நிலத்தின் தன்மை	,,	...	குறிஞ்சி நிலம் (மலையும், மலையைச்சார்ந்தஇடமும்)

'தெண்ணீர் வயற் றொண்டை நன்னாடு சான்றோருடைத்து' என ஔவைப் பிராட்டியாரால் பாராட்டப் பெற்றது தொண்டை மண்டல நாடு. இந்த நாட்டின் தலைநகரமாகச் சங்க காலத்திலும், பல்லவ அரசர்கள் காலத்திலும், அக்காலத்திற்குப் பின்னரும் விளங்கியது காஞ்சிபுரம் என்னும் புகழ் வாய்ந்த புண்ணியத் தலமாகும்.

காஞ்சிபுரத்திற்குத் தென்மேற்கே 45 கல் தொலைவிலும் சென்னைப்பட்டினத்திற்குத் தென்கிழக்கே 87 கல் தொலைவிலும், பாலாற்றின் கரையில் குன்றுகள் புடைசூழ அழகாக அமைந்துள்ளது வேலூர் என்னும் பெரிய பெரு நகரம். தமிழ் மூதாட்டி கூறியுள்ள வாறு பாலாற்றின் தெளிவான நீர் பாயப்பெற்ற வயல்கள் பல இவ் வூரின் மருங்கே அமைந்து, நெல், கரும்பு முதலிய உணவுப் பொருள்

கனி வழங்கி உயிர்களை ஓம்புகின்றன. பண்பிற்சிறந்த உயர்ந்தோர்கள் பலர் இவ்வூரில் வாழ்ந்து நல்வழியிற் பொருள் ஈட்டியும், ஈட்டிய பொருளைப் பகுத்துண்டு பல்லுயிரோம்பியும், ஐயந்திரிபறக் கல்வி கற்றுத் தெளிவுற்றும், கற்ற கல்விச் செல்வத்தைப் பிறர்க்கு வழங்கியும், மக்களுக்குற்ற நோயைப் போக்கியும் அறத்தின் வழி நிற்பர்.

மேன்மை சான்ற இவ்வணி நகரம் பண்டைப் பெருமையும் புதுமைச் சிறப்பும் கொண்டது. வசிஷ்டர், அகஸ்தியர், கௌதமர், பாரத்வாஜர், வால்மீகி, கஸ்யபர், அத்திரி என்ற தவமுனிவர் எழுவரும் (சப்த ரிஷிகள்) பண்டைக் காலத்தில் வட நாட்டிலிருந்து தல யாத்திரையாகத் தென்னாட்டிற்கு வந்தனரென்றும், அவர்கள் சுமேரு மூலைவரை சென்று மீண்டும் திரும்பித் தம் தேசத்திற்குப் போகும் போது வேலூருக்கருகே சிறிது காலம் தங்கினரென்றும், அவ்வாறு தங்கியிருந்தபோது வேலூருக்கு இரண்டுகல் தொலைவிலுள்ள சக்தி மலை அல்லது பகவதி மலையைச் சுற்றிலும் சிவலிங்கங்களை ஸ்தாபித்து சிவபெருமானை வழிபட்டனரென்றும், அம்முனிவர்களில் ஒருவராகிய அத்திரி முனிவர் தற்போது வேலூர் கோட்டைக் கோவிலிருக்குமிடத்தில் சிவலிங்கத்தை ஸ்தாபித்துப் பூசித்தார் என்றும் புராண வரலாறு கூறுகின்றது.

விஜய நகர அரசர்கள் காலத்திலும், மகம்மதியர் ஆட்சிக்காலத்திலும் மராத்திய மன்னர் காலத்திலும், ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்திலும் இந்நகரம் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்திருக்கின்றது. திப்பு சுல்தானின் பிள்ளைகள இருவர் இவ்வூர்க் கோட்டையில் ஆங்கிலேயரால் சிறை வைக்கப்பட்டனர். அவர்களின் உறவினர்கள் சுல்தான் இறந்தபின் அடக்கம் செய்யப்பட்ட கோரிகள இன்றும் இவ்வூரில் உள்ளன.

1857-ஆம் ஆண்டில் நடைபெற்ற சிப்பாய்க் கலகத்திற்குப் பல வருஷங்களுக்கு முன்பே, அந்நியராகிய ஆங்கிலேயர் ஆட்சியை அகற்றும்பொருட்டு 1806-ஆம் ஆண்டில் வேலூர் மக்கள் கிளர்ச்சி செய்தனர். வேலூரில் ஏற்பட்ட இந்தக் கலகம் வெற்றி பெற்றிருந்தால், இந்திய நாடு முழுவதும் அங்கங்கே கலகங்கள் ஏற்பட்டு ஆங்கிலேயர் ஆட்சிக்குச் சாவு மணி அடிக்கப்பட்டிருக்கும் என ஆங்கிலேயர்களே நினைத்தனர். வேலூர் கோட்டையை கலகக்காரர்களிடமிருந்து மீட்ட ஆங்கில தளபதி ஒருவர் பின்வருமாறு எழுதியுள்ளார். "ஆங்கிலேயர்களை ஒழித்துக் கட்ட வேண்டுமெனத் தீட்டப்பட்டிருந்த சதித் திட்டத்தின் ஆழத்தை இவ்வளவெனக் கூறுதலரிது. ஆங்கிலேயர்கள் எரிமலையின் மீது வாழ்வது போலிருந்தனர். எரிமலை ஒருமுறை வெடித்த அனுபவமே வேலூர் கலகத்தின் அநுபவம். இன்னும் பல முறை எரிமலை வெடித்துத் துன்புறுத்தலாம். அது எப்போது வெடிக்கும், எத்தனை முறை வெடிக்கும் என்று சொல்வதற்கில்லை."

சார்லஸ் மெக்பர்லேன் (Charles Macfarlane) என்பவர் தாம் எழுதிய இந்திய சரித்திரத்தில், "வேலூரில் நடந்த கலகத்தின்போது ஆங்கில ஆட்சிக்கு ஏற்பட்ட ஆபத்திற்கு ப்போல வேறெந்தச் சமயத்திலும் ஏற்பட்டதில்லை" எனக் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது வடார்க்காடு மாவட்டத்தின் தலைநகரமாக இருப்பது வேலூராகும். இது காட்பாடி இரயில் சந்திப்பிற்கு 4 கல் தொலைவிலுள்ளது. காட்பாடி — விழுப்புரம் இரயில் பாதையில் வேலூர் டவுன், வேலூர் கண்டோன்மெண்டு என்று இரு இரயில் நிலையங்கள் அமைப்பெற்றுள்ளது. தென்னாட்டிலுள்ள கோட்டைகள் பலவற்றிலும் அழகு மிகுந்தும், அழிவு அடையாமலும் உள்ளது இவ்வூர் கருங்கற்கோட்டை. நீண்டு உயர்ந்த மதிற்சுவரின் நிலைப்பும், ஆழ்ந்து அகன்ற அகழியின் அமைப்பும், கோவில் கோபுரம், கலியாண மண்டபம் முதலியவற்றின் சிற்பத்திறனும் காண்போரை வியப்பிலாழ்த்தாமலிருக்கமாட்டா.

வேலூர் சிறந்த ஒரு வியாபார ஸ்தலம் ஆகும் சென்னையில் இருந்து பெங்களூருக்குச் செல்லும் முக்கியமான சாலையில் இது அமைந்துள்ளது. இவ்வூரிலிருந்து சுற்றுப்புறங்களிலுள்ள ஊர்களுக்குப் பல சாலைகள் கிளைத்துச் செல்லுகின்றன. அரிசி, வெல்லம், புளி, வெங்காயம் முதலிய பல உணவுப் பொருட்கள் இந்தியாவின் பிற பகுதிகளுக்கும் வெளிநாடுகளுக்கும ஏற்றுமதியாகின்றன. பித்தளைப் பாத்திரம் செய்தல். பீடி சுருட்டுதல். தோல் பதனிடுதல் போன்ற கைத்தொழில்கள் பல இவ்வூரில கடைபெறுகின்றன.

வேலூர் கல்வி வளர்ச்சியிலும் தன் கருத்தைச் செலுத்துகின்றது. இவ்வூரில் இரண்டு கலைக்கல்லூரிகளும், மத சம்மந்தமான கல்வி புகட்டும் இரு கல்லூரிகளும், ஆசிரியர்கட்குப் பயிற்சிதரும் கல்லூரி ஒன்றும், போலீஸ் படையினருக்குப் பயிற்சி தரும் கல்லூரி ஒன்றும், மருத்துவக் கல்லூரி ஒன்றும் ஆக ஏழு கல்லூரிகள் உள்ளன. ஆண் பிள்ளைகட்கும் பெண் பிள்ளைகட்குமாக எட்டு உயர்நிலைப்பள்ளிகளும், பல தொடக்கநிலைப் பள்ளிகளும் இவ்வூரில் உள்ளன. ஆசிரியர்கட்குப் பயிற்சிதரும் பள்ளிக்கூடங்கள் நான்கும் உள்ளன.

அமெரிக்க கிறிஸ்தவ சங்கத்தாரால் நடத்தப்படும் உலகப் புகழ் வாய்ந்த மருத்துவ நிலையம் ஒன்றும், அரசினரால் நடத்தப்படும் பெரிய மருத்துவ நிலையம் ஒன்றும், நகராண்மைக் கழகத்தாரால் நடத்தப்படும் ஆங்கில ஆயுர்வேத யூனானி மருத்துவ நிலையங்கள் சிலவும் இவ்வூரில் உள்ளன. ஆண்களுக்காகவும், பெண்களுக்காகவும் இரு மத்திய சிறைச்சாலைகள் இவ்வூரிலிருக்கின்றன.

வேலூர் கோட்டைக் கோவிலில் எழுந்தருளியுள்ள தெய்வத்தின் பெயர் ஸ்ரீ ஜலகண்டீஸ்வரர் என்பதாகும். கோட்டையினுள் வடகிழக்குப் பகுதியில் இக்கோவில் அமைந்துள்ளது. காட்பாடியிலிருந்து வேலூருக்கு அமைக்கப்பட்டிருக்கும் கான்கிரீட் சாலையின் மேற்குப் புறத்தில் அமைந்துள்ள இக்கோட்டை, தன் வாயிலிக்கு நேரே தேசப் பிதாவின் திருவுருவச் சிலையைப் பெற்றுள்ளது. கோவிலின் சிற்ப வேலை வியக்கத்தக்க மேம்பாட்டுடன் தன்னிகரற்று விளங்குகின்றது. வானளாவும் கோபுரத்தை உடைய கோவிலைத் தன் நடுவே பெற்று அகன்று ஆழ்ந்த அகழி சூழ குணதிசையிலிருக்கும் குன்றை எதிர் நோக்கிக் கம்பீரமாக அமைந்திருக்கும் இந்தக் கோட்டையின் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும்.

புதைபொருளாராய்ச்சித்துறை மேற்பார்வையாளரான திரு. லாங்கர்ஸ்டு (Mr. Longhurst) என்னும் ஆங்கிலேயர், "மதுரையிலும் விஜய நகரத்திலும் வேறு இடங்களிலும் உள்ள புகழ் வாய்ந்த ஆயிர்க்கால் மண்டபங்களைவிட வேலூர் கோட்டைக்கோவில் திருக் கல்யாண மண்டபம் சிறியதாக இருந்தாலும், இது தென்னிந்தியாவிலுள்ள மிக அழகுவாய்ந்த மண்டபம் என்பது என் பணிவான அபிப்பிராயம்" என 1915—16ல் எழுதிய தம் அறிக்கையில் எழுதி உள்ளார்.

நாள்தோறும் கணக்கற்ற யாத்ரீகர்களும், பிரயாணிகளும் பழம் பெருமை சான்ற இந்தக் கோவிலைக்காண வருகின்றனர். கோவிலின் சிற்பத் திறனைக்கண்டு வியக்கின்றனர். கோவிலில் பூசை நடை பெறுமளவிற்பதை அறிந்து வருந்திச் செல்லுகின்றனர்.

கோவிலைப் பற்றிய புராண வரலாறு

சப்தரிஷிகள் எழுவரும் தென்னாட்டில் தங்கியபோது பகவதி மலையைச் சுற்றிச் சிவலிங்கங்களை ஸ்தாபித்துச் சிவபெருமானை வழிபட்டனர் என்ற செய்தி முன்னர் கூறப்பட்டது. எழுவருள் ஒருவராகிய வசிஷ்ட முனிவர் வேப்பமரங்கள் நிறைந்த காட்டில் சிவலிங்கத்தை ஸ்தாபித்து சிவபெருமானை வழிபட்டார். அவர் அப்பொழுது வழிபட்ட இடம் இப்பொழுது ஆற்காட்டுக்கு மேற்குப் பக்கத்திலுள்ள வேப்பூர் என்ற கிரமமாகும். அகஸ்தியமுனிவர் சாமவிருக்ஷங்கள் நிறைந்தவனத்தில் தங்கிச் சிவபெருமானை வழிபட்டார். அந்த இடம் இப்போது ஆற்காட்டுக்கு வடகிழக்கில் உள்ள வன்னிவேடு என்னும் கிரமமாகும். கௌதமரிஷி கொடைமல்லி வனத்தில் சிவலிங்கத்தை ஸ்தாபித்து சிவபெருமானை வழிபட்டார். அந்த இடம் இப்போது ஆற்காட்டுக்கு வடமேற்கிலுள்ள குடிமல்லூர் என்ற பகுதியாகும். பாரத்வாஜமுனிவர் புத்விருக்ஷவனத்தில் சிவபெருமானை வழிபட்டார். அவ்விடம் இப்போது ஆற்காட்டிற்குக் கிழக்கிலுள்ள

புதுப்பாடி என்னும் கிராமமாகும். வான்மீகி முனிவர் தற்போது ஆற்காட்டிற்குத் தென் மேற்கிலுள்ள விஷாரம் என அழைக்கப்படும் ஊரில் விஷவிருக்ஷம் நிறைந்த காட்டில் சிவலிங்க ஸ்தாபனம் செய்து சிவபெருமானை வழிபட்டார். கஸ்யப முனிவர் சடாரண்யம் என்ற காட்டில், இப்போது ஆற்காடு என அழைக்கப்படும் இடத்தில் சிவலிங்க ஸ்தாபனம் செய்து சிவபெருமானை வழிபட்டார். அத்திரி முனிவர் வேலமரக் காடாகிய வேலூரில் சிவலிங்க ஸ்தாபனம் செய்து சிவபெருமானை வழிபட்டார்.

சப்த ரிஷிகளில் ஒருவராகிய அத்திரி முனிவர் வேலூரில் சிவலிங்கத்தை ஸ்தாபித்துப் பூசித்தார் என்ற செய்தி முன்னர் கூறப்பட்டது. அத்திரி முனிவர் சிவபெருமானை வழிபட்டு வந்தபோது இந்த இடம் வேல மரங்கள் நிறைந்த காடாக இருந்தது. அத்திரி முனிவரும் பிற ஆறு முனிவர்களும் இவ்விடத்தை விட்டுப் போன பிறகு அத்திரி முனிவரால் பூசிக்கப்பட்ட சிவலிங்கமானது கரை புரண்டோடிய பாலாற்று வெள்ளத்து மணலால் மூடப்பட்டது. இந்த லிங்கத்தைச் சுற்றி ஒரு சிறு குளம் இருந்தது. காலக்கிரமத்தில் இவ்விடம் புற்றால் மூடப்பட்டது. எழுநூறு ஆண்டுகட்கு முன் பத்ராசலத்திலிருந்து தமிழ் நாட்டிற்கு வந்த பொம்மி ரெட்டி என்ற செல்வந்தன் ஒருவன் தெய்வத்தூண்டுதலினால் இந்த லிங்கத்தைத் தோண்டி எடுத்து இதைச் சுற்றிக் கோவிலும் கோட்டையும் கட்டினான். நாள்தோறும் தோஷிலில் பூசை நடைபெற்றது. விழாக்களும் நடைபெற்றன. கரிகாலச் சோழன் என்ற பெயருடைய சோழ மரபைச் சேர்ந்த சிற்றரசன் ஒருவன் அக்காலத்தில் இப்பகுதியை ஆண்டு வந்தான். பொம்மிரெட்டியின் வேண்டுகோளின்பேரில் கரிகாலன் வேலூரை அவனுக்குக் கொடுத்தான்.

தமிழ் ஓலைச்சுவடியொன்றில் பின்வருமாறு எழுதப்பட்டுள்ளது

''தென்கைலாச மலையின்மேல் தெய்வத் தச்சனுகிய மயனால் கட்டப்பட்டதும் பொன்மயமான மதிலிலப்பெற்றதுமான ஒரு கோட்டை உள்ளது.''

கைலாச மலையின் அடிவாரத்தில் கைலாசப் பட்டணம் என்னும் பெயரிய வளநகர் ஒன்றுள்ளது. சோழ பாம்பரையைச் சேர்ந்தவனான நான்காவது கரிகாலன் அந்நகரின் அரசனுவான்.

தென் கைலாச மலைக்கு வடகிழக்கில் ஐந்து நாழிகை (ஆறு மைல்) தூரத்தில் பள்ளிகொண்டராய மலை என அழைக்கப்படும் தர்ம லிங்க மலை உள்ளது. பள்ளிகொண்டராய மலையின் மேற்கில், வேலப் பாடி என்ற நகரம் அமைந்துள்ளது. வேலப்பாடிக்கு மேற்கில், சதுப் பேரி கிராமத்திற்கு ஒன்றரை நாழிகை (இரண்டு மைல்) தூரத்தில்

பாலியாறு ஓடுகின்றது. இந்த ஆற்றின் உற்பத்தி ஸ்தானம் நந்தி மலைக் குன்றுகளாகும். வேலப்பாடி நகரிலிருந்து பாலாறு வரையிலும் வேலமரங்கள் அடர்ந்த காடு இருந்தது. கரிகாலச் சோழச் சக்கரவர்த்தி இந்தக் காட்டை அழித்து அவ்விடத்தில் ஒரு கோவிலையும், நகரத்தையும் ஏற்படுத்த எண்ணி இருந்தான்.

இவ்வாறிருந்தபோது, கோதாவரி நதிக்கரையிள்ள பத்ராசலம் என்னும் ஊரில் எத்தம ரெட்டி என்ற செல்வந்தர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் மனைவியின் பெயர் கமலாட்சி. அவ்வம்மையார் பொம்மையன், திம்மையன் என்ற இரு புத்திரர்களைப் பெற்றெடுத்த பின் இறந்துபோனார். எத்தம ரெட்டி மறுமணம் செய்து கொண்டார். இரண்டாம் மனைவி நான்கு பிள்ளைகளைப் பெற்றெடுத்தாள். எத்தம ரெட்டி தம் பிள்ளைகள் ஆறுபேரும் உரிய வயது அடைந்தபோது அவர் கட்குத் தம் சொத்தை இரு மனைவிகள் என்ற முறையில் இரு சமபாகமாக்கி ஒரு பாகத்தை முதல் மனைவியின் இரு பிள்ளைகட்கும் மற்றொரு பாகத்தை இரண்டாம் மனைவியின் நான்கு பிள்ளைகட்கும் கொடுத்தார். இவ்வாறு பாகப் பிரிவினை ஏற்பட்டதால் இரண்டாம் மனைவியின் நான்கு பிள்ளைகளும் பொறுமை கொண்டு பொம்மையனையும், திம்மையனையும் கொன்றுவிடத் திட்டமிட்டனர். அவர்கள் திட்டத்தை அறிந்த பொம்மையனும் திம்மையனும் அவ்விடத்திலிருந்து தப்பித் தென்னாடு நோக்கிப் புறப்பட்டுப் பாலாற்றங்கரையை அடைந்தனர். அவர்கள் பல இடங்களிலும் அலைந்து இறுதியாகப் பள்ளிகொண்டாவிற்கு அருகிலுள்ள திருமணி என்ற ஊரில் தங்கினர். இவ்வூரில் ஒரு குளம் இருந்தது. அதிலிருந்த தீர்த்தம் காசி தீர்த்தம் என்றும் பள்ளிகொண்டாவில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ ரங்கநாதப் பெருமான் குளிப்பதற்காக இக்குளம் பயன்பட்டதென்றும் கூறப்படுகின்றது.

திருமணி என்னும் ஊரில் தன் சகோதரனுடனும் இதர குடும்பத்தினருடனும் தங்கிய பொம்மைய ரெட்டி கைலாச மலையடிவாரத்திலிருந்த கைலாசப்பட்டணத்திற்குச் சென்று, கரிகாலச் சோழச் சக்கரவர்த்திக்குக் காணிக்கை செலுத்தித் தம் மரியாதையைத் தெரிவித்துக்கொண்டார். பிறகு அவர் தாம் தென்னாடு போந்ததின் வரலாற்றைக் கூறித் தாமும் தம் குடும்பமும் தங்கி வாழ்வதற்கு ஓர் இடம் அருளி உதவுமாறு வேண்டிக்கொண்டார். சக்ரவர்த்தி அவர் வேண்டுகோளுக்கிணங்கித் தம் ராஜ்யத்தில் அவர் எங்கு வேண்டுமானாலும் தங்கி வாழலாம் எனக் கூறினார்.

அரசரிடமிருந்து விடை பெற்றுக்கொண்டு வந்த பொம்மைய ரெட்டி, வடக்கில் தர்மலிங்க மலையாலும், தெற்கில் பள்ளிகொண்டராய மலையாலும் மேற்கில் தென் கைலாச மலையாலும் சூழப்பட்ட

வேலப்பாடி நகரத்தைத் தாம் தங்கி நிலைபெறுவதற்கு உரிய இட மாகத் தேர்ந்தெடுத்தார். சிவன விஷ்ணு, பிர்மா ஆகிய மும்மூர்த்தி களையும் ஒருங்கே வழிபடுவதற்குரிய இடம் இதுவே என அறிந்து பொம்மைய ரெட்டி தம் தம்பியுடனும், குடும்பத்துடனும் திருமணி யிலிருந்து இங்கு வந்து சேர்ந்தார்.

வேலப்பாடியில் பொம்மைய ரெட்டி வந்து சேர்ந்தபின், வேலூ ருக்குத் தென்கிழக்கில் 21 மைல் தொலைவிலுள்ள ஆரணி என்னும் நகரில் வாழ்ந்து வந்த ஒருவகைக் கொள்ளைக் கூட்டத்தாருடன் இவர் போரிடவேண்டி வந்தது. இந்தக் கொள்ளைக் கூட்டத்தினர் அவ்வப் போது வேலப்பாடி நகரத்துக்கு வந்து கொள்ளையடித்தும் மக்களை வேறு வழியில் துன்புறுத்தியும் வந்தனர். பொம்மைய ரெட்டி இந்தக் கொள்ளைக் கூட்டத்தாருடன் போரிட்டு அவர்கள் புறமுதுகிட்டோடு மாறு செய்தார். கொள்ளைக் கூட்டத்தினரை அடக்கிய நற்செய் தியைக் கேள்விப்பட்ட கரிகாலச் சோழச் சக்ரவர்த்தி பொம்மைய ரெட்டியைத் தம்மிடம் அழைத்துப் பரிசுகள் வழங்கியதோடல்லாமல் இவர் பாதுகாப்பிலிருக்க ஒரு சிறு சேனையும் கொடுத்துதவினர்.

பொம்மைய ரெட்டி இவ்வாறு வேலப்பாடியில் கள்வர் தொல்லை இன்றி இன்ப வாழ்வு நடத்தி வந்தபோது ஒருநாள் இவர் வைத் திருந்த பசுவொன்று, ஐந்து கரிய காம்புகளையுடைய, அழகிய கன்று ஒன்றை (காராம் பசு) ஈன்றது. இந்தப் பசுக் கன்று நாளடைவில் வளர்ந்து பெரியதாகித் தானும் ஒரு கன்றை ஈன்றது. இந்தக் கன்று தாய்ப் பாலைக் குடிக்கவில்லை. வேறென்றையும் உண்ணவு மில்லை. தாய்ப் பசுவும் கன்றைப் பற்றி அக்கறை கொள்ளாமல் வழக்கம்போலக் காட்டிற்குப் புல் மேயப் போய்விட்டது. அன்று மாலை அது திரும்பி வந்தபோது அதன் மடியில் பால் சுரந்திலலாமல் வற்றி இருந்தது. பொம்மைய ரெட்டி அந்த அதிசயத்தைப் பார்த்து அப்பசுவைப் பற்றிச் சந்தேகம் கொண்டார். பசுக்களை மெய்த்து வந்தவர்களைக் கேட்டபோது அவர்களும் தக்க காரணம் சொல்ல வில்லை. எனவே பொம்மைய ரெட்டி தாமே காரணத்தை அறிய விரும்பி மறுநாள் மேய்ச்சலுக்காகக் காட்டிற்குப்போன பசுவைப்பின் தொடர்ந்து தாமும் காட்டிற்குச் சென்றார். அங்கே வடதிசையில் அரைநாழிகை தூரத்தில் நீராலும், அடர்ந்த புதர்களாலும் சூழப் பட்டிருந்த ஒரு புற்றின்மேல் பசு நின்று கொண்டிருந்ததை அவர் பார்த்தார். ஐந்து தலை நாகம் ஒன்று புற்றிலிருந்து வெளியே வந்து பசுவின் மடியில் வாய் வைத்துப் பாலை உறிஞ்சியுண்டபின் புற்றினுள் மறைந்துபோனதையும் அவர் பார்த்தார். பசுவும் அவ்விடத்தை விட்டகன்றது

பொம்மைய ரெட்டி அவ்விடத்திலேயே அவ்விரவு தங்கித் தாம் கண்ட அதியத்தின் பொருளைத் தமக்கு விளக்குமாறு இறைவனை நோக்கித் தவங்கிடந்தார். அன்றிரவு அவர் கனவில் சாம்பசிவப் பெருமாள் மனித உருவத்தில் தோன்றி, ''அன்பனே, நீ நம்பால் கொண்டிருக்கும் பக்திக்கு மெச்சி நாமே ஐந்து காம்புகளையுடைய மடியைப் பெற்ற இந்தப் பசுவை உற்பத்தி செய்தோம். அதன் பாலையும் உண்டோம். நீ கவலைப்படாதே. இவ்வுலகில் இன்பவாழ்வு நீண்டு வாழ்வாயாக!'' என வாழ்த்தியருளினார். அப்போது பொம்மைய ரெட்டி இறைவனைப் பணிந்து 'எம்பெருமானே, இவ்விடத்தில் தங்களுக்கு ஒரு கோவில் கட்டித் தங்களை எப்பொழுதும் யான் வழிபட விழைகின்றேன்'' என்று பணிவோடு கேட்டுக் கொண்டார். ''அவ்வாறு கோவிலெடுப்பதற்கு வேண்டிய பொருள் உன்னிடம் இருக்கின்றதா?'' என இறைவன் கேட்டார். ''அருட் கடலே, என்னிடம் உள்ள 1700 பசுக்களையும் விற்று அதனால் பெறும் தொகையைக்கொண்டு தங்கட்குக் கோவில் கட்டுவேன்.'' எனப் பொம்மைய ரெட்டி உடனே சிறிதும் தாமதிக்காமல் பதிலளித்தார். ஆண்டவன் மகிழ்ந்து, ''அன்பனே, உன் பக்திக்கு மகிழ்ந்தோம். யாமும் ஸ்ரீ வெங்கடேசப் பெருமாளும் பள்ளிகொண்டராய மலையில் ஒன்றுகக் கொஞ்ச காலம் வாழ்ந்திருந்தோம். பிறகு ஸ்ரீ வெங்கடேசப் பெருமாள் திருப்பதி என அழைக்கப்படும் திருவேங்கடத்திற்குப் போய்விட்டார். அவர் இங்கிருந்து எழுந்தருளுவதற்கு முன் தம் அடிச்சுவடுகளை மலைமீது சில இடங்களில் விட்டுச்சென்றார். தன் அடிச்சுவடுகள் உள்ள இடத்தில் பொம்மையன் என்ற பக்தன் அளவு கடந்த செல்வத்தைக் கண்டான். ஏழு நாட்களுக்குள் இந்த இடத்திலிருந்து அவன் இந்தச் செல்வத்தை அகற்ற வேண்டும். ஏனெனில் அந்த நாளுக்குப் பின்னர் இந்தச் செல்வம் மறைந்து போகும். பெற்ற அந்தச் செல்வத்தைக்கொண்டு பொம்மையன் தங்கட்கு ஒரு கோவில் கட்டவேண்டும்.' என்று எம்மிடம் சொல்லிப்போனார்'' எனக் கூறி விட்டு இறைவன் மறைந்து போனார்.

சிவபெருமான் கனவில் கூறியபடியே பொம்மைய ரெட்டி ஏறும்புப் புற்றிலிருந்து பள்ளிகொண்டராய மலை வரைக்கும் ஏழு வரிசையாகத் தம ஆட்களை நிறுத்தி ஏழு நாட்களுக்குள் அங்கிருந்த செல்வமனைத்தையும் கொண்டுவந்து குவித்தார். கரிகாலச் சோழச் சக்ரவர்த்தி இச்செய்தியைக் கேள்விப்பட்டு மகிழ்ந்து, பொம்மைய ரெட்டியைத் தம்மிடம் அழைத்து அவருக்கேற்ற மரியாதை வழங்கினார். தம் நாட்டில் பறையறைவித்துத் தம் குடி மக்களனைவரும் பொம்மைய ரெட்டி கட்டவிருக்கும் கோவில் கட்டுவதற்கு உதவி புரியுமாறு கட்டளை யிட்டார்.

கோவில் கட்டுவதற்கேற்ற சிற்பி ஒருவனைப் பொம்மைய ரெட்டி யார் தேடி அலைந்தார். அச்சமயத்தில் இமய மலையிலுள்ள பதரி

காஸ்ரமம் என்னும் புண்ணிய ஸ்தலத்திலிருந்து ஒரு சிற்பி தென்னாட்டுக்கு ஸ்தல யாத்திரையாக புறப்பட்டார். அவர் புறப்பட்ட பொழுது அவர் மனைவி கருவுற்றிருந்தாள். அந்தச் சிற்பி தென்னாட்டிலுள்ள திருப்பதி, காளத்தி, திருத்தணி, திருவேலங்காடு, திருக்கழுக்குன்றம், காஞ்சிபுரம் முதலிய திவ்ய ஸ்தலங்களைத் தரிசித்துக்கொண்டு திருவண்ணாமலையை நோக்கிச் செல்லும்போது வேலப்பாடியில் வந்து தங்கினார். பொம்மைய ரெட்டியார் சிவாலயங் கட்டவிருப்பதை அறிந்த சிற்பி அவரிடம் சென்று அதைப்பற்றிப் பேசினார். பொம்மைய ரெட்டியார் மிகவும் மகிழ்ந்து சிற்பியை நோக்கி, "ஐயா, சிவ ஆலயம் கட்டுவதற்குக் கடைகால்போட நல்ல நாள் ஒன்று பார்த்துச் சொல்லும்" என்று கூற. அவ்வாறே சிற்பி சாலிவாகன சகாப்தம் 1195, சுக்ல வருஷம், பங்குனி மாதம் 10 ஆம் தேதி (ஆங்கில வருஷம் (1264) பொருத்தமான நாள் எனக் குறிப்பிட்டுக் கூறினார். அப்போது சிவபெருமான் பொம்மைய ரெட்டியார் முன் தோன்றி, 'அன்பனே, எமக்குக் கோவில் கட்டத் தொடங்கியபின் சரியாக ஒன்பது ஆண்டுகள் கழித்து, ஈஸ்வர வருஷம் பங்குனி மாதம் 19 ஆம் தேதி எமது இலிங்கத்தைக் கோவிலில் பிரதிஷ்டை செய்யவேண்டும். யாம் புற்றில் கழுத்தளவு வரை நீரில் முழுகி இருந்தோமாதலால் எமக்கு ஜலகண்டேஸ்வரர் எனப் பெயரிடவேண்டும்" எனக் கூறிவிட்டுப் பின் மறைந்துபோனார்.

பிறகு பொம்மைய ரெட்டியார் கூலியாட்களைக்கொண்டு வேல மரங்கள் நிறைந்த காட்டை அழிக்கத் தொடங்கினார். இவ்வாறு வேலங்காட்டை அழித்துக்கொண்டிருந்தபோது ஓர் அற்புதம் நிகழ்ந்தது. சில முயல்கள் ஒரு புதரிலிருந்து வெளிக்கிளம்பி ஓடின. ஒரு நாய் அவற்றைத் துரத்தியது. அந்த முயல்களில் ஒன்று மட்டும் பின் திரும்பி நாயைத் துரத்தத் தொடங்கியது. நாயும் அந்த முயலுக்குப் பயந்து ஓடியது. முயல் வெகுதூரம்வரை நாயைத் துரத்திச்சென்று, இறுதியில் மேல் குறிப்பிடப்பட்ட புற்றை வலம் வந்தது. பொம்மைய ரெட்டியார் இந்த அற்புத நிகழ்ச்சியைக்கண்டு அதிசயித்து மகிழ்ந்து ஆழ்ந்து சிந்தித்துக்கொண்டிருந்தபோது இறைவன் அசரீரி வாயிலாக வானத்திலிருந்து, 'அன்பனே முயல் நாயைத் துரத்திக்கொண்டுவந்த தூரத்தையே நமது கோவில் கட்டு வதற்குரிய இடமாகக் கொள்வாயாக' எனக் கூறியருளினார். பொம்மைய ரெட்டியார் மிகவும் மகிழ்ந்து அவ்விடத்தை குறிப்பிட்டுக் கொண்டு, பள்ளிகொண்டராய மலையிலிருந்து கற்களை யானைகளின் மீது கொணர்ந்து குறிப்பிட்ட இடத்தில் கோவில் கட்டத் தொடங்கினார்.

தென்னாட்டில் இவ்வாறு கோவில் வேலை நடைபெற்றுக்கொண்டு இருந்தபொழுது, வட நாட்டில் பதரிகாஸ்ரமத்தில் சிற்பியின் மனைவி நன்முகூர்த்தத்தில் ஓர் ஆண் மகவை ஈன்றெடுத்தாள். அந்தப் பிள்ளை நாளொரு மேனியும் பொழுதொருவண்ணமுமாக வளர்ந்து, தமது குல வித்தையாகிய சிற்பக் கலையினை உற்ற வயதில் குறைவறக்

ற்றுத் திறம்பட விளங்கினான். தந்தை தென்னாட்டு யாத்திரைக்குச் சென்றிருந்ததைத் தாயின் வாயிலாக உணர்ந்த அந்த இளஞ் சிற்பி தன் தாயிடம் விடைபெற்றுக்கொண்டு, தந்தையைத் தேடித் தென்னாட்டிற்கு வந்தான். பாலாற்றின் கரையை அவன் அடைந்த போது, கோவிலொன்று அருகாமையில் சமீப காலத்தில் கட்டப் பட்டிருப்பதை உணர்ந்து அங்குச்சென்று அதைப் பார்வையிட்டான். அக் கோவிலைக் கட்டிய சிற்பியையும் சந்தித்தான். அக்கோவில் கட்டத் தொடங்கப்பட்ட நேரம் நல்லதாகவில்லை என்றுணர்ந்து வருந்தினான். கோவிலில் கொஞ்சகாலம் வரைதான் பூசை நடை பெறும் என்றும், பிறகு பலவாண்டுகள் பூசையில்லாமலிருந்து மீண்டும் பூசை ஒழுங்காகக் கோவிலில் நடைபெறுமென்றும் அவ்விளஞ் சிற்பி கூறினான்.

பொம்மைய ரெட்டியார் இளஞ் சிற்பி சொன்னது இச்செய்தியைக் கேட்டு மிகவும் வருத்தப்பட்டார். ஆண்டவனிடம் முறையிட்டுக் கொண்டார். ஜலகண்டநாதர் பொம்மைய ரெட்டியாரின் முன்தோன்றி சிற்பியின் மகனுகிய இளஞ் சிற்பியின் உதவியைக்கொண்டு, முயல் நாயைத் துரத்திய தூரத்தையே அளவாகக்கொண்டு, வேறொரு கோவில் கட்டுமாறு சொன்னார். பொம்மைய ரெட்டியார் இச்செய் தியைச் சிற்பியிடம் சொன்னபோது, இளஞ் சிற்பி தன் மகனென உணர்ந்த சிற்பி அவனைத் தழுவி மகிழ்ந்தான். இளஞ் சிற்பி தன் தந்தையோடு கலந்தாலோசித்து வேறொரு கோவில் கட்டுவதற்கும் பதிலாகத் தற்போது கட்டப்பட்டுள்ள கோவிலைச் சுற்றுமுன் முயலால் குறித்த அளவில் ஒருகோட்டை கட்டினால் அதுவே அமையும் என்று பொம்மைய ரெட்டியாரிடம் கூறினான். பொம்மைய ரெட்டி யாரும் மகிழ்ந்து தம் இசைவைத் தெரிவித்தார். ஆகவே நல்ல நாள் ஒன்று குறிப்பிடப்பட்டது. குறிப்பிடப்பட்ட நேரம் சரியான தென ஆராய்வதற்காக இளஞ் சிற்பி கலச ஸ்தாபனஞ் செய்து, அக் குடத்தை ஒரு யானையைக் கொண்டிழுக்குமாறு செய்தான். பானை யால் இழுக்கப்பட்டும் கலசம் நகராமல் போகவே, அந்த நேரம் நல்லதும் பொருத்தமானதும் எனத் துணிந்து கோட்டை நிர்மாண வேலை தொடங்கப்பெற்றது.

ஆண்டவனுல் அருளப்பட்டபடியே, கோட்டையானது கட்டப் பெற்று முடிவடைந்தது. சிவபெருமான் தேவியரின் திருவுருவங்கள் நல்ல நேரத்தில் ஸ்தாபிக்கப்பட்டு, ஜலகண்டேஸ்வரர் என்றும், அகிலாண்டேஸ்வரி என்றும் திருநாமங்கள் சூட்டப்பெற்றன. வேலங் காடு அழிக்கப்பட்டு அவ்விடத்தில் ஒரு நகரம் உண்டானதால் அந்நகருக்கு வேலூர் எனப் பெயர் இடப்பட்டது.

பொம்மைய ரெட்டியார் இக்கோவிலில் நாள்தோறும் ஆறுகால பூஜையும், இவ்விடபொழுது சிற்பியின் வழிக்கும் ஒழுங்கான நடை பெறுமாறு ஏற்பாடுசெய்து நடத்திவந்தார். அவர் பிறகு இறைவன் திருவடி நிழலில் அடைந்தார். அவருக்குப் பின்னர் பல ஆண்டுகள் கோவிலில் பூசை நடைபெற்றும், பிறகு பூசை நின்றுபோன துமான

	இப்பகுதியை ஆண்ட அரசர்கள்	காலம்	ஆண்டுகளின் மொத்த எண்ணிக்கை	பிற குறிப்பு
1	இந்து அரசர்கள்	1274-1612	338ஆம்	முக்கால பூசையும், விழாக்களும்எவ்வித இடையூறுமின்றி நடைபெற்றன.
2	மகம்மதிய ,,	1612-1642	30ஆம்	கோவிலினுள் பூசை மட்டும் நடை பெற்றது
3	மராத்திய ,,	1642-1718	76ஆம்	முன்மாதிரியே பூசைகளும் விழாக்களும் நடைபெற்றன.
4.	மகம்மதிய ,,	1718-1752	34ஆம்	பூசை முதலியன அடியோடு நிறுத்தப்பட்டன.
5	ஆங்கிலேய ,,	1752-1947	195ஆம்	வேலூர் நகர மக்களின் வேண்டுகோளின் பேரில் 1909, 1919-1920 ஆக இருமுறை பூசை நடைபெற அரசியலாரால் உத்தரவு கொடுக்கப்பட்டது. இந்தக் காலத்தில் 195 வருஷம் பூசையே நடைபெறவில்லை எனலாம்.
6	இந்தியக்குடியரசு	16-8-1947 முதல் இன்றுவரை		அந்நியராட்சியில் பூசை முதலானவை நடைபெறுமலிருந்ததைப்போலவே நம் நாடு சுதந்திரம் பெற்ற பிறகும் வருந்தத்தக்க இந்நிலை நீடித்து வருகின்றது

இந்த கோயிலைப் புதுப்பித்து மீண்டும் அன்றுபோல பூசையும், சிறப்பான உற்சவங்களும் நடைபெறுமாறு செய்யப்படும் செயலானது இந்த நாட்டின் தன்மான உணர்ச்சியையும் கௌரவத்தையும் காப்பதாகும். அதுமட்டுமல்லாமல் வேலூர் நகரமக்களின் நெடுங்கால விருப்பத்தைப் பூர்த்தி செய்வதுமாகும். மேலும் நாள்தோறும் கோட்டையையும் கோவிலையும் காணவரும் ஆயிரக்கணக்கான யாத்ரிகர்களின் கவலையைப் போக்குவதுமாகும்.

பழம் பெருமை சான்ற இந்தக் கோவில் பூசையின்றி மூடப்பட்டு புறக்கணிக்கப்பட்டிருப்பது வருந்தத்தக்க செயலாகும். கோவிலைப் புதுப்பிப்பதில் வேலூர் நகர மக்கள் ஆர்வமும் ஊக்கமும் கொண்டு

மீண்டும் பூசையும் உற்சவமும் நடைபெறுமாறு செய்தல் வேண்டும். கிட்டத்தட்ட முப்பது ஆண்டுகளுக்கு முன்னரே (7—5—19.8) வேலூர் நகரத்திலிருந்த விவேகானந்தா வாசகசாலையின் அங்கத்தினர்கள், வேலூர் நகர மக்களை இந்த நற்பணியில் ஈடுபடுத்துவதற்காக ஒரு சிறு புத்தகத்தை வெளியிட்டுள்ளனர். இச்சிறு புத்தகம் வெளிவருவதற்குக் காரணகர்த்தா, அந்நாளில் சென்னை மேல்சபை அங்கத்தினராக (M.L.C.) இருந்தவரும், இந்நாளில் சென்னை மாநில நிலவரி அமைச்சராக இருப்பவருமாகிய திருவாளர் M.A. மாணிக்க வேலு நாயகர், B.A.,B.L., என்னும் பெருந்தகையாளராவார்.

நம் நாடு அந்நியர் ஆட்சியை அகற்றி தன்னைத்தானே ஆளும் சுதந்தரத்தை இப்போது பெற்றுள்ளது. சுதந்திரம் பெற்று ஒன்பது ஆண்டுகள் ஆகியும், பெரிய நகரம் ஒன்றில் உள்ள, பெருமை சான்ற கோவிலொன்று பாழடைந்து, பூசையின்றி, விழாக்களின்றிப் புறக்கணிக்கப்பட்டுத் தன் சிறப்பிழந்து கிடக்கின்றது. கோவிலையும் கோட்டையையும் காணவரும் அந்நிய நாட்டவர்களும், அந்நிய மதத்தவர்களும் எள்ளி நகையாடுகின்ற நிலையில் உள்ளது இக்கோவில். உலகில் ஏழு அதிசயங்கள் உள்ளன. அதுபோல் வேலூரிலும் ஏழு அதிசயங்கள் உள்ளன. தெய்வமில்லாத கோயில், அரசனில்லாத கோட்டை, மரங்களில்லாத மலை, நீரில்லாத ஆறு,.....? என்று எள்ளி நகையாடுவர் அயலார். தன்மான உணர்ச்சியுடைய ஆஸ்திகன் ஒவ்வொருவனும் இந்த இழிநிலையைப் போக்கி மீண்டும் பழைய நிலையை அடையுமாறு செய்யவே எண்ணம் கொள்வான்.

வடநாட்டில் அந்நியர் ஆட்சிக் காலத்தில் சீர்கேடுற்றிருந்த சரித்திரப் புகழ் வாய்ந்த சோமநாதபுர ஆலயம் நம்நாடு சுதந்திரம் பெற்ற பின் எந்நிலையை அடைந்தது? திரு. வல்லபாய் பட்டேல் அவர்களின் அரிய முயற்சியால், லட்சக்கணக்கில் பொருள் செலவழிக்கப்பட்டு கோவில் புதுப்பிக்கப்பட்டுப் பழைய நிலையை அடைந்துள்ளதன்றே? அது போலவே, வேலூர் கோட்டைக் கோவிலும் தன் பண்டைச் சிறப்பினை ஏன் எய்தல் கூடாது?

வேலூர்க் கோட்டையின் கண்ணுள்ள ஸ்ரீ அகிலாண்டீஸ்வரி சமேத ஸ்ரீ ஜலகண்டீஸ்வரப் பெருமான் கோவிலைப் புதுப்பித்து மீண்டும் அது தன் பழம் பெருமையை அடையச்செய்யும் முயற்சியில் யாங்கள் ஈடுபட்டுளோம் ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடம் ஜெகத்குரு சங்கராச்சார்ய சுவாமிகள் அவர்களும் மேன்மை பொருந்திய மைசூர் ராஜப்பிரமுகர் அவர்களும், முதலமைச்சர் அவர்களும், சென்னை மாநில முதலமைச்சர் அவர்களும், நிலவரி அமைச்சர் அவர்களும், அகில இந்தியபெடரல் நீதிமன்ற முன்னாள் தலைவர் ஸ்ரீபதஞ்சலி சாஸ்திரியார் அவர்களும் மற்றும் பல பிரமுகர்களும், எங்கள் முயற்சியை ஆதரித்தும், ஆசி கூறியும், ஊக்கமூட்டியும் வருகின்றார்கள். வேலூர் நகரப் பொது மக்களும் பிரமுகர்களும் இந்த நற்றொண்டு விரைவில் நிறைவேறத் தங்களால் இயன்ற வழியெல்லாம் ஒத்துழைத்து எங்களை ஊக்கிய அருளுமாறு வேண்டுகிறோம். வணக்கம்.

ஸ்ரீ அகிலாண்டேசுவரி அம்மன்



ஸ்ரீ ஜலகண்டேசுவரர்

மூர்த்தி இல்லாக் கீர்த்தி

(தொ. மு பாஸ்கரத் தொண்டைமான்)

பல்லவ மகேந்திர வர்மன் காஞ்சியில் இருந்து அரசு புரிந்தவன். தமிழ் நாட்டில் கலை வளர்த்த பெருமையில் பெரும் பங்கு இவனைச் சார்ந்ததே. ஆனால் இவன் வாழ்நாள் முழுவதும் போர். போர் - சளுக்கியரோடு இடைவிடாது போர். சளுக்கிய மன்னனை புலிகேசி தமிழ் நாட்டிற்கே வந்து காஞ்சியையே முற்றுகை இடுகிறான். இந்த முற்றுகையை தன் மன உறுதியாலும் மக்களது ஒத்துழைப்பாலும் பல்லவ மன்னன் சமாளித்துவிடுகிறான். சளுக்கிய புலிகேசியும் கடைசியில் சோர்ந்து மகேந்திரனோடு சமாதானம் செய்துகொண்டு தன் தலைநகராகிய வாதாபிக்குத் திரும்புகிறான். திரும்பும்போது செல்லும் வழியிலுள்ள சின்னஞ் சிறிய ஊர்களை - ஆம் தமிழ் நாட்டுக் கிராமங்களை சூறையாடியும், தீ வைத்தும் தன் ஆத்திரத்தைத் தீர்த்துக்கொள்கிறான். இத்தகைய கொடிய செயலுக்கு வஞ்சம் தீர்க்க முனைகிறான் மகேந்திரன் மைந்தனான நரசிம்ம வர்மன். தன் சேனைத் தலைவனான பரஞ்சோதியோடு வாதாபி மீது படையெடுத்து சளுக்கிய மன்னன் புலிகேசியை வென்று, அந்த வாதாபியையே தீக்கு இரையாக்குகிறான் நரசிம்மன். வாதாபி கொண்ட நரசிம்ம போத்தராயனாகவே புகழ் பெறுகிறான். வாதாபியைத் தீயிட்டு அந்த நகரைச் சூறையிடும்போது படைத் தலைவன் பரஞ்சோதிக்கு மட்டும் ஒரு சிறு ஆசை. அந்த வாதாபிக் கோட்டை வாயிலிலே பிரதிஷ்டை செய்திருந்த கணபதி விக்ரகத்தை மட்டும் பெயர்த்து எடுத்து தன் சொந்த ஊராகிய திருச்செங்காட்டங்குடியிலே பிரதிஷ்டை செய்து விடவேண்டும் என்று நரசிம்ம வர்ம பல்லவன் அனுமதி பெற்று அந்த விநாயகரை அப்படியே பெயர்த்து எடுத்து வந்து, திருச்செங்காட்டங்குடியில் உள்ள சிவன் கோவிலிலே பிரதிஷ்டை செய்கிறான். அந்தக் கோயில் அன்று முதல் கணபதீச்சுவரமாகவே மாறி விடுகிறது. இப்படித்தான் வாதாபி கணபதி தமிழ்நாட்டில் வந்து நிலைத்து இருந்திருக்கிறார். இது நடந்தது ஏழாம் நூற்றாண்டிலே.

இதைப்போலவே பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயும் இன்னொரு முயற்சி நடந்திருக்கிறது. ஆங்கில ரஸிகன் ஒருவன் தமிழ நாட்டிலிருந்து பிள்ளையார், முருகன், சிவன், விஷ்ணு, ராமன், அனுமன், நடன மங்கையர் கோவில் கணிகையர் எல்லோரையுமே – ஆம் நல்ல சிற்ப வடிவில் கல்லில் உருப்பெற்றிருப்பவர்களைத் தான் - அப்படியே பெயர்த்து எடுத்து, ஆங்கில நாட்டிற்கே அனுப்பிவிட முனைந்திருக்கிறான். பிரைட்டன் (Brighton) என்ற ஊரில் அவன் கட்ட விரும்பிய கலைக்கூடத்திற்கு இந்தச் சிலை உருவங்களை எல்லாம்

கொண்டு போய்விட எண்ணியிருக்கிறான். இத்தனை சிலைகளும் ஒரு பெரிய மண்டபத்தில் நாற்பது தூண்களில் உருவாகியிருக்கின்றன என்பதனால் அந்த மண்டபத்தில் உள்ள கற்கள் - அந்தக் கற்களைத் தாங்கும் தூண்கள் அத்தனையும் பெயர்த்து, அந்தக் கற்களுக்கும் தூண்களுக்கும் நம்பர் போட்டு கப்பலில் ஏற்றி எடுத்துச் சென்று திரும்பவும் பிரைட்டன் நகரிலேயே மண்டபத்தை நிர்மாணித்து விடுவது என்பது அவன் திட்டம். அதற்கென்று ஒரு பெரிய கப்பலையே தமிழ் நாடு நோக்கி கடலின்மீது செலுத்தியிருக்கிறான். வாதாபியிலிருந்து தமிழ் நாட்டிற்குப் பிள்ளையார் பெயர்த்து வருவதற்குத் துணை புரிந்த இறையருள் இந்த ஆங்கில ரஸிகனுக்கு துணை நிற்கவில்லை. கடலில் மிதந்து வந்த கப்பல் ஏதோ ஒரு காரணத்தால் கடலுக்குள்ளேயே மூழ்கிவிடுகிறது. மண்டபம் பெயர்வது நின்றிருக்கிறது. தமிழ் நாட்டுத் தெய்வங்களும் - தெய்வச் சிலைகளும் கடல் கடந்து செல்வதும் தடைப்பட்டிருக்கிறது. மண்டபம் மண்டபத்தில் உள்ள தூண்கள், தூண்களில் உள்ள சிற்ப வடிவங்கள் எல்லாம் நிலை குலையாமல் நிற்கின்றன. இன்றுவரை - இப்படிப்பட்ட பிரசித்தி பெற்ற மண்டபம்தான் வேலூர் கல்யாண மண்டபம். ஆம் மூர்த்தியில்லாக் கீர்த்தியுடைய ஜலகண்டேசுவரர் கோயிலுக்குள்ளே கிழக்கு நோக்கி கம்பீரமாக உயர்ந்திருக்கும் கல்யாண மண்டபந்தான் அது. அந்த மண்டபத்தின் முகப்பிலே ஆறு பெரிய தூண்கள் ஒவ்வொரு தூணிலும் குதிரைமீது ஆரோகணித்து வரும் வீரர்கள் சிறுத்தைகளை வேட்டையாடும் காட்சி தூண்களுக்கு மேலாக தவழ்ந்து வரும் போதிகை. இந்தத் தூண்களைத் தவிர இந்த மண்டபத்திலே அடுக்கடுக்காக நாற்பது தூண்கள் - பெரிய தூண்கள் இருபத்தி நான்கு. தூண் மண்டபத்திலே பதினாறு தூண்கள் ஒவ்வொரு தூணிலும் மூன்று தளங்கள் ஒவ்வொரு தளத்திலும் நான்கு பக்கங்கள், அப்படித் தூண் ஒன்றுக்கு பன்னிரண்டு சிற்ப வடிவங்கள் எல்லாம் அர்த்த சிற்ப வடிவில் (Bas relief) மூஞ்சுறு வாகனர் பிள்ளையார் பழ கோலங்களில் - மயிலேறும் கோலக் குமரன் பல வடிவங்களில் இத்துடன் சிவனது மூர்த்தங்கள். விஷ்ணுவினது அவதாரங்கள் இன்னும் எண்ணற்ற பெண்கள் - எழில் நிறைந்த வண்ணங்களில் எல்லாம் காட்சி கொடுக்கிறார்கள். இந்தத் தூண்களில், தூண்களை மறந்து விதானங்களை நோக்கினாலோ ஒரே அதிசயந்தான், விரிந்த தாமரை மலர்கள், அந்த மலர் இதழ்களைக் கொத்திக்கொண்டிருக்கும் கொஞ்சும் கிளிகள், எல்லாம் சேர்ந்து ஒரே சுழலில் சுழலும் நிலை. எல்லாம் சொல்லி விளக்க முடியாதவை. கண்டு களிக்க வேண்டியவையே. இப்படி ஒரு அற்புதக் கலைக்கூடமாகவே விளங்குகின்றது இந்தக் கல்யாண மண்டபம். இந்தக் கலைக்கூடம் ஆங்கில ரஸிகன் விரும்பிய படி பெயர்த்து பிரைட்டன் சென்றிருந்தால் தமிழ் கலை உலகிற்கு ஒரு மகத்தான நஷ்டம் ஏற்பட்டிருக்கும். அத்தகைய நஷ்டம் ஏற்படாமல் காப்பாற்றியிருக்கிறார் ஜலகண்டேசுவரர். ஆம். அந்தர்யாமி

யாய் இருந்து கொண்டே. உண்மைதானே. ஜலகண்டேசுவரர் தான் கோயிலில் இல்லையே. அவர் இருந்த கர்ப்ப கிருஹம் வெறிச்சோடித் தானே கிடக்கிறது இன்று.

இந்த ஜலகண்டேசுவரர் ஜாதகமே - பல கண்டங்கள் நிறைந்த ஜாதகம்தான். அவர் உருவானது, அவருக்கு பூஜை நடந்தது. அந்த பூஜை அடிக்கடி நின்றது. கடைசியில் கோயிலே விட்டே வெளியேற்றப்பட்டது எல்லாமே ஏதோ ஒரு பெரிய கதையாகவே இருக்கிறது.

பொம்மி ரெட்டியும், திம்மி ரெட்டியும் பத்ராசலத்தில் ஒரு சிற்ற ரசனின் மக்கள். அவர்களுடைய தாய் இறந்ததும் அவர்களுடைய தந்தை மறுமணம் செய்து கொள்ளுகிறான். இந்த மாற்றாந்தாய்க்கும் இரண்டு பிள்ளைகள் இவர்களுக்குள்ளே பகைமை. ஆதலால் தங்கள் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள பொம்மி ரெட்டியும், திம்மி ரெட்டியும் தமிழ நாட்டிற்கு வருகிறார்கள் வேல மரங்கள் நிறைந்த வேலப் பாடிக்கே வந்து தங்குகிறார்கள். ஏதோ கல்ல மாடுகளையும் பசுக்களையும் வளர்த்து ஒரு பண்ணையையே உருவாக்குகிறார்கள். அந்தச் சமயத்தில் ஆரணியிலிருந்த ஒரு கொள்ளைக்கூட்டம் மக்களையெல்லாம் துன்புறுத்துகிறார்கள். உண்மையிலேயே வீரர்களாகப் பிறந்த இந்த பொம்மையனும், திம்மையனுக்கும் இந்தக் கொள்ளைக் கூட்டத்தோடு போரிட்டு அவர்களை கருவறுக்குகிறார்கள். இவர்களது அரிய சேவையைப் பாராட்டி, அப்போது இப் பிரதேசத்தைக் கைலாசகிரி என்ற இடத்திலிருந்து ஆண்டு வந்த சோழன் கரிகாலன் (அந்த ஆதி திருமாவளவன் கரிகாலன் அல்ல) இவர்களுக்குத் தக்க பாதுகாப் பளித்து ஒரு சின்னஞ் சிறு ராஜ்யத்தையே ஸ்தாபித்துக்கொள்ள உதவுகிறான். இப்படி இந்த வேலப்பாடியிலே நிலத்த இவர்களிடம் ஒரு பசு ஐந்து காம்புகளோடு, அந்தப் பசுவோ தினந்தோறும் பக்கத்தில் உள்ள ஒரு ஏரியில் நீந்திச் சென்று ஏரியின் மத்தியில் உள்ள தீவில் இரண்டு முறை இறைவனை வழிபடுகிறது. புற்றிலே இருந்த ஐந்து தலைப் பாம்பு பசு வருகின்ற போதெல்லாம் அதனிடத்தே பாலை அருந்துகின்றது. இது என்ன அதிசயம் என்று வியந்து நின்ற பொம்மையனுக்கு, தாம் புற்றிடம் கொண்டிருப்பதை விளக்குகிறான் இறைவன். புற்று அகற்றப்படுகிறது சுயம்பு லிங்கம் வெளிப்படுகிறது. இறை அருளால் போதிய செல்வம் வேறு கிடைக்கிறது புதையலாகவே. மன்னன் கரிகாலன் ஆணையும், மக்கள் ஒத்துழைப்பும் உடன் சேருகிறது. கோயில் உருவாகிறது. சுமுத்துவரை ஜலத்திலே அமிழ்ந்திருந்த காரணத்தால் இந்த இறைவனுக்கு ஜலகண்டேசுவரர் என்று நாமஞ் சூட்டுகிறார்கள். அன்னை அகிலாண்ட நாயகியையும் உருவாக்கிப் பிரதிஷ்டை செய்கிறார்கள். இப்படித்தான் சாலிவாகன சகாப்தம் சுக்கில வருஷம் (கி.பி 1274) பங்குனி மாதம் பத்தொன்பதாம் தேதி, இச் ஜலகண்டேசுவரர் கோயிலுக்கு அடி

கோலி இந்தக் கோயிலைக் கட்டி முடித்தான் பத்ரிகாசி இமாம் என்ற சிற்பி என்று கூறுகின்றது கர்ணபரம்பரை. இந்தச் சிற்பியும் ஏதோ குடும்பத் தகராறு காரணமாகவே வடநாட்டிலிருந்து தமிழ் நாடு வந்தவன்தான்.

வருஷங்கள் சில கழிகின்றன இந்தக் கோயில் கட்டிய சிற்பியின் மகன் வளர்ந்து பெரியவனாகி தன் தந்தையைத் தேடிக்கொண்டு தெற்கு நோக்கி வருகின்றான். வேலப்பாடி வந்தவன், இங்கு உருவாகியிருக்கும் ஜலகண்டேசுவரர் கோயிலைக் காண்கிறான். சிற்பி மகன் சிற்பி அல்லவா? கோயில் மண்டபங்கள் மூர்த்திகள் எல்லாம் பிரமாதமாக அமைந்துவிட்டாலும், கோயில் கட்ட அடிகோலிய நாள், நல்ல நாள் அல்ல என்பதை உணர்கிறான். பொம்மி ரெட்டியிடமே சென்று இதை தெரிவிக்கிறான். தந்தையும், மகனும் ஒருவரை ஒருவர் அறிகிறார்கள். கட்டிய கோயிலை இடித்துத் திரும்பவும் கட்டுவதைவிட, கோயிலுக்கு பழுது வராது காக்க ஒரு கோட்டையையே அமைத்துவிடலாம் என்று திட்டமிடுகிறார்கள். கோட்டை எழுகிறது கோயிலைச் சுற்றி தென்னூட்டுக் கோட்டைகளில் எல்லாம் தலை சிறந்த கோட்டையாக அமைகிறது, அளவிலும், உறுதியிலும் உயர்ந்திருப்பது ராஜா தேசிங்கு ஆண்ட செஞ்சிக் கோட்டைதான் என்றாலும், அழகில் சிறந்த கோட்டையாக இந்தக் கோட்டை உருவாகிறது கிட்டத்தட்ட நல்ல சதுரமான வடிவத்தில் இரண்டு அடுக்கு அவர்களால் கல்லாலேயே மதில்கள் எழுப்பியிருக்கிறார்கள். கோட்டையின் கீழ்த் தளத்திலே அர்த்த சந்தர வகாவுகளில் அந்த வகாவுகளில் எல்லாம் காவற்கூடங்கள். மேல் தளத்திலே ஒரு பெரிய வண்டி போகக்கூடிய அளவிற்கு விஸ்தாரமான பாதைகள். இப்படிக் கட்டிய கோட்டையைச் சுற்றி, ஆழ்ந்து அகன்ற அகழி ஒன்று இப்படி எல்லாம் எந்தக் கோணத்திலிருந்து பார்த்தாலும் அழகாக இருக்கும். கோட்டை ஒன்று கட்டி ஜலகண்டேசுவரர் கோயிலைக் காப்பாற்றியிருக்கிறான் பொம்மைய ரெட்டி. ஆனால் அந்த ஜலகண்டேசுவரருக்கு இந்த பொம்மியிடம் நன்றி இல்லை. அவரே பொம்மியின் கனவில் தோன்றி கோட்டையையும் கோயிலையும் தெங்கணிக் கோட்டை நேங்கட தேவ மகா ராயலு என்பவனிடம் ஒப்படைத்துவிடச் சொல்கிறார், இறைவன் சொல்லுக்கு மறு சொல் சொல்லாத பொம்மியும் அப்படியே செய்கிறான். வேல மரங்கள் நிறைந்த இடத்தில் உருவானதால் வேலூர் என்றும், ராயலுவின் ஆட்சிக்குள் வந்த காரணத்தால் ராயவேலூர் என்று இந்த பெயர் பெறுகிறது. இது நடந்தது சாலிவாகன சகாப்தம் 1216 (அதாவது கி. பி. 1925).

இப்படிப் பதின்மூன்றும் நூற்றாண்டில் (ஆம் நவம்பர் 13 அமெரிக்கர்களுக்கு மாத்திரமல்ல - ஜலகண்டேசுவரருக்குமே நல்ல நம்பர் இல்லைதான் போலும்) உருவான கோட்டையும், கோவிலும்

பதினேழாம் நூற்றாண்டுவரை நன்றாக இருந்திருக்கிறது. வேங்கடதேவ மகா ராயலுவுக்குப் பின் கிட்டத்தட்டப் பத்துப்பேர் இந்த வேலூரில் இருந்தே ஆட்சி செய்து இருக்கிறார்கள். பதினேழாம் நூற்றாண்டில் இந்தப் பகுதியில்தான் பீஜப்பூர் சுல்தான் இந்த வேலூர்க் கோட்டையைக் கைப்பற்றியிருக்கிறார்கள். கான்கான், அவனது மகன் மகம்மதுகான் காலத்தில் எல்லாம் கோயிலுக்கோ, மூர்த்திக்கோ யாதொரு பழுதும் நேரவில்லை. ஆனால் மகம்மதுகானுக்குப் பின்வந்த அப்துல்கானுக்கு ஒரு செய்தி கிடைக்கிறது. பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள மூர்த்தியின் பீடத்தில் விலை உயர்ந்த ரத்தினங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன என்று ரத்தினங்களை கைப்பற்றும் ஆசையில் மூர்த்திகள் அகற்றப்பட்டிருக்கின்றன. ரத்தினங்கள் கிடைக்காமல் போகவே அப்துல்லாகானுக்கு ஒரே வெறி அகற்றிய மூர்த்தியை அகழியில் எறிந்துவிடுகிறான்.

இந்த பீஜப்பூர் சுல்தான்களது ஆட்சியும் நீண்டகாலம் நடக்கவில்லை. மேற்கே மராட்டிய மன்னர் ஆதிக்கம் வளர்ந்து அவர்கள் தென்னாட்டின்மீது படையெடுத்து வந்து இங்குள்ள நாடு நகரங்களையெல்லாம் கைப்பற்றி இருக்கிறார்கள். கி.பி. 1676-ல் துக்கோஜிராவ் தலைமையில் மராட்டியர், வேலூர்க் கோட்டையை முற்றுகையிட்டு வெற்றி கண்டிருக்கிறார்கள். கோட்டையைக் கைப்பற்றியவர்கள் ஜல கண்டேசுவரரை அகழியில் இருந்து தேடி எடுத்து திரும்பவும் பிரதிஷ்டை செய்து பூஜையை ஆரம்பித்திருக்கிறார்கள் என்றாலும் இந்த ஜலகண்டேசுவரர் ஜாதக விசேஷந்தான் தெரிந்ததாயிற்றே. இரண்டு வருஷங்கள் கழியுமுன்பே சுல்தான்கள் திரும்பவும் படையெடுத்து மராட்டிய மன்னன் துக்கோஜியின் மகன் சிங்கோஜியை வெற்றி கண்டு கோட்டையைக் கைப்பற்றி இருக்கிறான் அவ்வளவுதானா, ஜல கண்டேசுவரருக்கு அபிஷேக ஆராதனைகளும் நின்றிருக்கின்றன, இப்படியே அபிஷேகம் இல்லாமல் ஆராதனை இல்லாமல் இருந்திருக்கிறார். இருபத்தி ஒரு வருஷம் ஆம் கழுத்து வரை ஜலத்திலேயே முழுகிக் கிடந்த ஜலகண்டேசுவரருக்கு இந்த ஜல அபிஷேகங்கள் எல்லாம் எதற்கு என்று எண்ணிவிட்டார்களோ என்னவோ அந்த மகமதிய பக்தர்கள்.

ஆனால் இந்த ஜலகண்டேசுவரரும் சும்மா இருந்ததில்லை தனக்கு தனக்கு கண்டங்கள் ஏற்படுத்தும் மற்றவர்களுக்கும் கண்டங்கள் ஏற்படுத்திக்கொண்டுதான் இருக்கிறார். பழையபடியும் மராட்டியர்களை அழைத்திருக்கிறார். மராட்டிய மன்னன் சீனிவாச ராவ் கோட்டையை முற்றுகை இட்டு கோயிலை கைப்பற்றி இருக்கிறார். இவரும் இவர் மகன் ராமராவும் ஆண்ட முப்பது ஆண்டுகள் ஜலகண்டேசுவரருக்கு மறுபடியும் யோக ஜாதகம் அதன்பின் தான் ஜலகண்டேசுவரருக்கு நித்ய கண்டம் சேர்ந்திருக்கிறது. கி. பி. 1708ல் தாவூத்கான் மராட்

டியர்களைத் திரும்பவும் முடியடித்து வேலூரை கைப்பற்றியிருக்கிறான், இவன்பின் ஆற்காடு நவாபுக்களான சதாதுல்லாகான், குலாம் அலி கான், பாக்கர் அலி முதலியவர்களின் ஆட்சியின்கீழ் வேலூர் கோட்டை இருந்து வந்திருக்கிறது. இப்படி இருந்த காலத்திலும் ஜலகண்டேசுவரர் பூஜை நிற்கவில்லை. ஆனால் அப்போதிருந்த முகம்மதிய அரசிளங்குமரன் ஒருவன், அழகின் சிறந்த உருத்திர கணிகை ஒருத்தியை விரும்பி அவளை இந்த கோயில் பிராகாரத்திலேயே பலாத்காரம் பண்ணியிருக்கிறான். அழகியாக இருந்த ஆரணங்கு நல்ல வீர மகளாகவும் விளங்கியிருக்கிறாள். ஆதலால் அரசகுமாரனது உடைவாளையே உருவி அவன் நெஞ்சில் பாய்ச்சி இருக்கிறாள். அரசிளங்குமரனை வீழ்த்தியபின் தன் வாழ்நாளையுமே முடித்துக்கொண்டிருக்கிறாள். இப்படி இந்த கோயில் பிரகாரத்தில் படிந்த ரத்தக் கரையை முழுக்க முழுக்க ஜலத்திற்குள்ளேயே இருந்த ஜலகண்டேசுவரராலும் கழுவித் துடைக்க முடியவில்லை. அந்த அவமானம் தாங்காமலேயே கோவிலை விட்டு ஓடி திரும்பவும் கோயிலுக்குள்ளேயே வராமல் பக்கத்திலுள்ள சின்னஞ் சிறு ஊரான சத்துவாச்சேரியிலே சத்தியாக்கிரஹம் செய்து கொண்டிருக்கிறார் இன்றுவரை.

இதுவரை சொன்னதில் எவ்வளவு கர்ண பரம்பரை எவ்வளவு சரித்திர உண்மை என்று என்னால் அறுதியிட்டு உரைக்க முடியவில்லை கோட்டையும் கோயிலும் இருப்பது நிதரிசனம். கோயிலுக்குள் இருந்த மூர்த்தி அகற்றப்பட்டிக்கிறார் என்பதும் கண்கூடு. யார் காலத்தில் யாரால் அகற்றப்பட்டார் என்பதற்கு சரித்திரச்சான்று ஒன்றும் சரியாக கிடைக்கவில்லை. சுமார் இரு நூறு வருஷங்களாக ஆம் ஆங்கிலேயர் இங்கிருந்த காலம் முழுவதும் அதற்குப் பின்னும் இக்கோயிலில் மூர்த்தி இருக்கவில்லை என்பது மட்டும் பிரசித்தமாக இருக்கிறது.

இந்த வேலூர் நகரமே சில விஷயங்களுக்கு பிரசித்தமானது. அகன்ற பரந்த பாலாறு ஒடுகிறது. இந்த நகரில் எல்லையில் பாலாற்றில் வற்றாது பால் ஓடாவிட்டாலும் தண்ணீராவது ஓட வேண்டாமா... நீர் இல்லாத ஆறுகளே இருக்கிறது இந்தப் பாலாறு ஊரைச்சுற்றி நீண்டு உயர்ந்த மலைகள் இருக்கின்றன. ஆனால் மரங்கள் மருந்துக்கும் இருக்கவில்லை. மலைகளும் மணிக்கற்பாறைகளும், மரங்கள் இல்லாக் காரணத்தால் அழகிழந்து நிற்கின்றன இதனோடு கோமகன் இல்லாத கோட்டை, அதிகாரமில்லாத போலீஸ் என்றெல்லாம் வேலூரில் அதிசயங்களை அடுக்கிக் கொண்டே போவார்கள். மக்கள் எல்லா அதிசயங்களையும் தூக்கியடிக்கும் வகையில் மூர்த்தி இல்லாக் கீர்த்தியையும் பெற்றிருக்கிறது இந்த நகர். இந்தக் கீர்த்தி நிலைத்துவிட வேண்டாம் என்று நினைக்கிறார்கள் மக்கள். அதற்கு வேண்டிய முயற்சிகளும் நடந்துக்கொண்டிருக்கின்றன. யார் யார்

ஏப்படி முயற்சி பண்ணினாலென்ன... அந்த ஜலகண்டேசுவரருக்கு மனம் வரவேண்டாமா... அவர் மனம் வைக்கவில்லையே இன்னும்

கண்டத்தில் விடமும், கையினில்
மழுவும், காதினில் துலங்கிடும் நாக
குண்டலத்து அழகும், தலையில்
வெண்மதியும், குரைகழல் சிலம்பும், நன்னுதலில்
புண்டரத்து அழகும், பொருப்பன
மார்பில் புனைதலை மாலையின் சிறப்பும்
கண்டு அகமகிழ்ந்து களிக்கும் நான்
உளதோ ? கருணைசேர் ஜலகண்டீச்வரனே !

என்பதுதானே இன்றைய வேலூர் வாசிகளின் பிரார்த்தனை. ஜலகண்டேசுவரர் கோயில் எத்தனை கோணங்களில் இருந்து பார்த்தாலும் அழகாகவே இருக்கும். அத்துடன் அக்கோயிலுக்குள் புதைந்து கிடக்கும் சிற்ப செல்வங்கள் கொஞ்சமா, கோயிலைச் சுற்றியிருக்கும் கோட்டை, கோயிலின் வாயிலில் இருக்கும் ராஜகோபுரம் கோயிலுக்குள் இருக்கும் கல்யாண மண்டபம். மண்டபத்தை அலங்கரிக்கும் கல் தூண் ஒன்று, இவைகளையே பார்க்கிறவர்கள் பக்கத்தில் உள்ள புகைப் படங்களிலே இந்த மூர்த்தி இல்லாக் கீர்த்தியுள்ள கோயிலைக் காண வேண்டும் என்ற ஆசையை உங்கள் உள்ளத்தில் இவை உண்டாக்கியிருந்தால் என் சேவை மிக்க பயனுடையதுதான்.

மூர்த்தி சிறிது கீர்த்தி பெரிது என்பதுதான் பழமொழி. ஆம், அன்று மாவலியிடம் மூன்றடி மண் வேண்டி வந்து வாமனனேயின்னர் திரிலோகங்களையும் அந்த திரு அடியால் அளந்து உயர்ந்திருகிறான் திருவிக்ரமனுக, அளவில் சிறிய மூர்த்திதான் வாமனனுக வந்த திருவிக்கிரமன். ஆனால் அவன் கீர்த்தியோ பெரியது. ஆள் வளர்ந்ததோடு அவன் கீர்த்தியும் அல்லவா வளர்ந்திருக்கிறது. ஆனால் இந்த ஜலகண்டேசுவரர் கோயில் கொண்டிருந்த இந்த வேலூரின் கீர்த்தி பெரியதாகவே இருக்கிறது. மூர்த்தி இல்லாமலேயே.

இந்து குஸல்மான் கிறிஸ்தவரும் இன்னும்
எண்ணற்ற ஜாதி இருந்தாலும்
சொந்தச் சகோதரர் போலவே நாற்பது
ஜோடி ஜனங்களும் கூடிடுவோம்.

என்று பாடினான் பாரத மாதாவின் திரு ஒலக்கத்தைப் பாடிய கவிஞன், ஒருவன். அவன் பாடிய அந்த பாட்டின் பொருளை முழுதும் அறிந்துக்கொள்ள வேண்டுமானால். இந்த வேலூருக்குதான் போக வேண்டும். தெருவுக்குத் தெரு கோயில்கள். அந்தக் கோயில்களில்

அடுத்து அடுத்து மருதிகள். இப்படி வாழும் இந்துக்களோடு முகம் மதியர்களோடும் கிறிஸ்தவ சகோதரர்கள் உலகப் பிரசித்திப்பெற்ற மருத்துவ நிலையம்-மருத்துவ கல்லூரி எல்லாம் அமைத்து உலக அரங்கிலே வேலூருக்கு ஒரு பெரும்புகழைக் தேடி தந்திருக்கிறார்கள். இந்த கீர்த்திகளெல்லாம் பக்கபலமாக இங்குள்ள கோயிலும்-மூர்த்தியுள்ள கீர்த்தியாகவே விளங்கட்டும். அதற்கு அந்த ஜலகண்டேசுவரர் அருள்புரியட்டும்.

9—11—58 தினமணி சுடர் நாளிதழ் — நன்றி.

வ

ஸ்ரீ அகிலாண்டேசுவரி சமேத ஸ்ரீ ஜலகண்டேசுவரர் 1956-ஆம் ஆண்டு வெளியிட்ட இச்சிறு நூலினாலும், தெளிவான விளக்கத்தினாலும், 1958-ஆம் ஆண்டு தினமணி பத்திரிகையில் வெளியிட்டதனால அப்பொழுதே இதற்கான பெரிய பிரமுகர்களும். உயர்ந்த அதிகாரிகளும், சிறந்த பக்திமான்களும், எடுத்த முயற்சி வீன்போகாது அதுவே அப்பொழுதே ஓர் அழகான அஸ்திவாரமாகி அவர்களுடைய கஷ்டம் வீண்போகாமல் வேர்ஊன்றி இருந்திருக்கின்றது என்று இபபொழுதுதான் கண்கூடாக காணமுடிகின்றது. இருப்பினும இப்புத்தகத்தின் மூலம் நமக்கு எல்லாம் அறிந்திடாத வேலூர் கோட்டை ஸ்ரீ அகிலாண்டேசுவரி சமேத ஸ்ரீ ஜலகண்டேசுவரர் கோவிலின் உண்மையான சிறந்த சிறு ஏட்டினை நாம் அறிந்துக் கொள்ள கொடுத்து உதவிய உயர்திரு. K கிருஷ்ண ரெட்டி அவர்களுக்கு நாமும் வேலூர் மக்களும் நன்றி உள்ளவராக இருப்போமாக.

ஸ்ரீ ஜலகண்டேசுவரரை வரலாற்றில் குறிப்பிட்டு இருப்பதுபோல் வேலூருக்கு அருகில் உள்ள சத்துவாச்சாரி என்னும் இடத்திலிருந்த லிங்கத்தை அவ்விடத்தில் உள்ள சிவபக்தர்கள் (இப்பொழுதும் உள்ளனர்) சில ஆண்டுகளுக்கு முன் கண்டு எடுத்து அதற்கு ஒரு கோவில் கட்டி பூசை செய்து வழிபட்டு வந்தனர். அவ்வூர் பெரியவர்கள் ஒன்று கூடி இந்த லிங்கம் மிகவும் பழமை வாய்ந்தது (7-ம் நூற்றாண்டையுடையது) அதிலும் இங்கு அதற்கு ஏற்ற இடம் இல்லை என்று கருதினர்கள்.

இதற்கு இடையில் வேலூரில் உள்ள பெரிய பிரமுகர்களும் உயர்ந்த அதிகாரிகளும். சிறந்த பக்தர்களும் ஒருமனதாகவும் விடாமுயற்சியாகவும் இருந்தனர். இதற்கு முன்னால் வட ஆற்காடு மாவட்டம் வறட்சியால் பாதிக்கப்பட்டு இருப்பதால் வேலூரில் உள்ள எல்லா கோவில்களிலும் வருண பகவானுக்கு ஓமம் நடந்தது. அதில்

கோட்டை கோவிலும் சில தினங்கள் நடத்தப்பட்டது. இதன் மூலம் 16—3—1981-ஆம் ஆண்டு பங்குனி மாதம் திங்கட்கிழமை ராகு காலத்திற்கு பிறகு மேற்கூறிய சத்துவாச்சாரியில் உள்ள சிவ லிங்கத்தை அங்கிருந்தவர்களின் உதவினால் மேற்கூறிய வேலூரில் உள்ளவர்களும் ஒன்று கூடி ஒற்றுமையுடன், பெரும் முயற்சியுடனும் 42 அங்குலம் சுற்றளவும் 5 அடி உயரமுள்ள சிவலிங்கத்தை கோட்டை கோவிலுனுள் பிரதிஷ்டை செய்தனர். சிவன் வந்த பாதையிலே சக்தியான ஸ்ரீ அகிலாண்டேசுவரியும் 18—3—81 புதன்கிழமை காலை பிரதிஷ்டை செய்தனர். மக்கள் ஆட்சியில் மக்கள் விருப்பத்திற்கு புதியதொரு சரித்திரம் படைக்கப்பட்டுவிட்டது. இடைவிடாது பூஜைகளும், ஆராதனைகளும் வெகு சிறப்பாகவும், வேலூரிலும் சுற்றுபுறங்களில் உள்ள கோவில்களிலிருந்து தினமும் பூர்ண கும்ப புனிதத் தீர்த்த அபிஷேகங்கள் சிறந்த முறையில் மக்கள்கள் உற்சாக மாக செய்து வருகின்றனர்.

இதை வாசிக்கின்றவர்கள் வேலூர் கோட்டை கோவிலுள் எழுந்தருளி இருக்கும் அருள்மிகு ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி சமேத அருள்மிகு ஸ்ரீ ஜலகண்டேஸ்வரின் அருளும் ஆசியும் பெற்று போது மாறு கேட்டுக்கொள்கிறேன்.

வளர்க இந்து சமூகம் ! ஒங்குக இந்துக்கள் ஒற்றுமை !!

குறிப்பு : இப்புத்தகத்தை எல்லோரும் படித்து பயன்பெற இதை ஒரு விலை மதிக்கதக்க பொக்கிஷமாக வைத்து இருப் போமாக.

இங்ஙனம்,
K. கிருஷ்ணரெட்டி & சுமார்கள்,
13/1, பங்களா தெரு,
கோசப்பேட்டை,
வேலூர். வ. ஆ.